COPY OF DEPOSITION

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.

அசல் வழக்கு எண்.360/2019

வா.சா. 1:சந்திரசேகரன் நாள்:07.01.2025

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 7ம் தேதி வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.அசோக் பிரசாத் பி.ஏ.பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**(வாதி ஆஜர். 1,2 பிரதிவாதிகள் ஆஜரில்லை. 3ம் பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1.** 12.10.1970 தேதியில் பாகப்பிரிவினை கிடைத்த சொத்தை தான் தாவா சொத்தாக காட்டியுள்ளேன் என்றால் பாகக்கறார் சொத்தும் வருகிறது மற்ற சொத்துக்களும் வருகிறது. வேறு சொத்துக்கள் என்பது எப்படி வந்தது என்றால் 1991ல் கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். பாகக்கறார் சொத்துக்களில் எவ்வளவு விஸ்தீரணம் காட்டியுள்ளேன் என்றால் 10 செண்ட் காட்டியுள்ளேன். கிரையம் பெற்ற சொத்து 2 1/2 செண்ட் ஆகும். மேற்கண்ட சொத்துவிவரங்களை எதில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. பாகக்கறார் சொத்துக்களுக்கு எல்லாம் ஈரோட்டில் இருந்து கரூர் செல்லும் மெயின் ரோட்டில் இருந்து பிரிந்து கிழக்கு நோக்கி 4 தடம் வருகிறது. சர்வே எண்.728/9 மற்றும் 11 இரண்டும் நிலஅளவில் வண்டி பாதையாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**2.** மேலும் நிலஅளவில் வண்டி பாதை அப்படியே தாள் உள்ளது. இந்த வழக்கு போடுவதற்கு முன்பு தடத்தில் பிரச்சனை வந்தது. சர்வே எண்.728/15 ல் உள்ள தட சம்மந்தமாக பிரச்சனை வந்தது. மேற்படி தடம் 12.10.1970 பாகக்கறார் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. சர்வே எண்.728/15ல் உள்ள தடத்தில் வாழை மரம் வைத்துவிட்டதால் 6 அடியில் உள்ள தடம் 3 அடியாக குறைந்து விட்டது. சர்வே எண்.970/10 உள்ள சொத்திலும் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் உள்ளதாக பிரச்சனை

செய்து வந்தார்கள். சர்வே எண்.970/10 என் தந்தை சிறு வயதில் இருந்து அனுபவித்து வந்த சொத்தாகும். சர்வே எண்.970/10 என்பது என் தந்தை பெயரில் தனியாக பட்டா கொடுக்கப்பட்டது. 12.10.1970 பாகப்பிரிவினைக்கு முன்பே என் தந்தை பெயரில் தனியாக இருந்ததால் அதை பாகப்பிரிவினையில் காட்டவில்லை.

**3.** 12.10.1970 பாகக்கறாரில் மேற்படி சொத்தை எல்லோரும் பொதுவாக அனுபவித்து வருகிறோம் என்று கண்டுள்ளது என்றால் தவறு. 12.10.1970 பாகக்கறார் பத்திரத்தில் சர்வே எண்.970/10 என்பது காட்டப்பட்டுள்ளது அதில் 10 செண்ட் மட்டும் காட்டப்பட்டுள்ளது. பாகக்கறார் பத்திரத்தில் ஏற்கனவே எங்கள் அனுபவத்தில் இருந்து வரும் பொது இடத்திற்கும் தெற்கு என்று உள்ளது என்றால் வாசகம் பாகக்கறார் பத்திரத்தில் உள்ளது ஆனால் அந்த செக்குபந்தி விவரம் கூறியுள்ளது தவறு. எங்கள் பிராதில் செக்குபந்தி தவறு என்று கூறியுள்ளேன். மேற்படி இடத்தில் வடப்புற பாதியை பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் தென்புற பகுதியை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் தவறு முழுவதும் நான் தான் அனுபவித்து வருகிறேன். மேற்படி இடம் சம்மந்தமாக நான் சொத்துவிவரத்தில் காட்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்.970/10 சொத்தானது 10 செண்டாக காட்டப்பட்டுள்ளது. ஆனால், பிராதில் 11 ½ செண்டாக காட்டியுள்ளோம்.

**4.** பட்டாவில் 24 செண்ட் உள்ளது. மேற்படி பட்டாவில் 24 செண்ட்க்கும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.06.09.1991ம் நான் கிரையம் பெற்றதற்கு எந்த சர்வே எண்ணில் வருகிறது என்று என்னால் சொல்லமுடியாது. அந்த கிரைய சொத்து பழைய க.ச.எண்.970/4 அதற்கு புதிய சர்வே எண். என்ன என்று தெரியவில்லை. அந்த பூமிகள் எல்லாம் நத்தத்தில் உள்ளது.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**